மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தத் துறைக்கு நான் பொறுப்பேற்றுக்கொண்ட உடனே ஒரு இடத்தில் கூட நான் பேசியிருக்கிறேன். அது பத்திரிகையிலேயும வந்திருக்கின்றது. இப்படி நிறைய நுட்பமான கருவிகள் பழுது பார்க்கப்படாமல் பல இடங்களில் இருக்கின்ற காரணத்தினால், பல லட்சக் கணக்கான மதிப்புள்ள நல்ல முக்கியமான கருவிகள் பயன் படுத்தப்பட முடியாமல் இருக்கின்றன என்று சொல்லி அதற்காக உத்தரவைப் போட்டிருக்கிறோம். அந்தக் கருவிகளை நமக்குத் தருகின்ற நேரத்தில் அதனுடைய டெக்னிக்கல் நோஹௌ அதாவது அது வேலை செய்யக்கூடிய முறைகளை சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், எல்லா மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் டி. எம். இ. அவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி, இப்படிப்பட்ட மெஷின்கள் எங்கெங்கு வேலை செய்ய வில்லையோ அவைகளை ரிப்பேர் செய்து பயன்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருவிகளை செப்பனிடுவதற்குத் தெரிந்தவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதைத் திறம்படச் செய்வதற்கு, அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு, அந்த ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்கள் பயிற்சி பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கேயே அதற்கு வாய்ப்பு இருக்கிறது. கிண்டியிலே கூட 2 என்ஜினிரிங் கல்லூரிகள் இருக்கின்றன. கிண்டி என்ஜினிரிங் கல்லூரி, ஐ.ஐ.டி. இருக்கின்றன. இந்த இரண்டு கல்லூரிகளின் உயர்மட்ட அதிகாரிகளைப் பார்த்து சொல்லி இருக்கிறோம். இப்படிப்பட்ட எக்விப்மென்டுகளை ரிப்பேர் செய்ய ஒரு பிரிவை ஏற்படுத்தினால் நல்லது என்று சொல்லி இருக்கிறோம். அவர்களும் இதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் பல முறைகளிலே நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

கொடுமுடி அரசு மருத்துவமனைக் கட்டிடம்.

*வினா எண் 781—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சித் தொகுதி, காடுமுடியில் அரசு மருத்துவமனைக்குக் கட்டப்பட்டு வரும் கட்டிடம் பாதியில் நின்றிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) இந்தக் கட்டிட வேலையை மேற்கொண்ட மருத்துவமனை வளர்ச்சி குழு முழுவதையும் கட்டி முடிக்கவில்லை. இந்தக் கட்டிடத்தை உடனடியாக முடிப்பதற்காக இயக்குநர் அவர்கள் ரூ. 75,000-க்கு திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்து அரசின் அங்கீகாரத்துக்கு அனுப்பியுள்ளார். இந்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கல்ராயன் மலைப் பகுதியிலுள்ள மூலிகைகள்.

*வினா எண் 782 திரு சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப்பகுதி சித்த மருத்துவத்திற்குத் தேவையான மூலிகைகள் உள்ள பகுதியென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிகமாக மூலிகை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) கல்ராயன் குன்றுகளில் மூலிகைகளை வளர்க்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே மிகவும் அபூர்வமான மூலிகைகள் விளைகின்றன. அந்த மூலிகைகளைப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்கு, அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வி போட்டதற்குப் பின்னாலே தான் இப்படி அந்தப் பகுதியில் ஒரு அரிய வாய்ப்பு இருக்கிறது என்று நான் அறிய நேர்ந்தது.